பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 18 திங்கட்கிழமை 04.01.2021 கதிர் 291

## மருதனார்மடம் கொத்தணி: மேலும் ஐவருக்குத் தொற்று

மருதனார்மடம் கொத்தணியில் மேலும் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இன்று 240 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு

2

# இலங்கைக்கு நாளை வருகின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

## தமிழ்க் கூட்டமைப்புடனும் சந்திப்பு



**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நாளை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார்.**

**இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.**

**வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் விஜயம் மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர் , எதிர்வரும் 7ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறு மட்டப் பேச்சுகளிலும் ஈடுபடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2

## அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும் அரசு!

### சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை



(ந.லோகதயாளன்)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு முழுமையான கவனம் செலுத்தி அவர்களைச் சிறைச்சாலைகளில் இருந்து விடுவிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத்

2

## கருணாவை கூட்டமைப்புடன் இணைப்பது சாத்தியப்படாது

### சி.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம்.

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர்

2

## 37,817 பேர் இதுவரை மீண்டனர்!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களில் மேலும் 565 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை

2

## அரசியல் கைதிகள் விடுதலை குறித்து நல்ல தீர்வு கிடைக்கும்

### சுரேன் ராகவன் எம்.பி. நம்பிக்கை

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பொறுத்தவரை நல்லதொரு தீர்வு நிச்சயம் எட்டப்படும் என்று நம்புகின்றேன்.

- இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2

## ஈ.பி.டி.பியிடமும் முன்னணியிடமும் ஆதரவு கேட்டு மாவை எஸ்.எம்.எஸ்.!



(எஸ்.நிதர்ஷன்)

நடந்து முடிந்த யாழ். மாநகர சபையின் மேயர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட இம்மானுவேல் ஆனோல்ட்டுக்கு ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்

2

## அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அரசை தமிழ் எம்.பிக்கள் 28 பேரும் சேர்ந்து கோர வேண்டும்

### தமிழ்த் தேசியக் கட்சியின் ஸ்ரீகாந்தா யோசனை



நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்றுள்ள அனைத்து தமிழ் எம்.பிக்களும் ஒன்று சேர்ந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோரிக்கை ஒன்றை விடுக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி பல்வேறு

2



## அரசியல் கைதிகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இந்த விவகாரத்தில் ஓர் கூட்டான வேண்டுகோளை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க முடியுமானால் ஒருவேளை அது வெற்றியளிக்கக் கூடும்.

வடகிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு மாவட்டம் சார்ந்த தமிழ் எம்.பிக்கள் மொத்தம் 28 பேர் பல்வேறு கட்சிகளின் சார்பில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இயல்பாகவே அக்கறை கொண்டிருப்பதை எவரும் மறுத்திட இயலாது.

அரசியல் முரண்பாடுகளின் மத்தியிலும் இந்த நிலைமை காணப்படுவதால், ஒரு பொது வேண்டுகோள் தொடர்பில் இவர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பது சாத்தியமானது.

ஆயினும், தமிழ் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரசாங்கத் தரப்பில் திட்டவட்டமாக கூறப்பட்டு வரும் நிலையில், நீண்ட பலவருடங்களாக சிறையில் வாடும் இந்தத் தமிழர்களின், விவகாரத்தை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் என்ற அடிப்படையில், இனியாவது அணுகுவது, காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்தக் கைதிகள் அரசியல் கைதிகளா என்பதை சர்ச்சை ஆக்கி, விவாதப் பிரதிவாதங்களுக்கு இடமளிக்காமல், இவர்களின் விடுதலையை மாத்திரமே இலக்காகக் கொண்டு, அதற்காக சாத்தியமான சகல வழிகளிலும் முயற்சிப்பதே பொருத்தமானது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான தமிழ்க் கைதிகள் என்று இவர்களை குறிப்பிடுவதால் எதுவும் இழக்கப்பட்டு விடப் போவதில்லை.

இந்த தமிழ் கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்துமே அரசியற் பின்னணி கொண்டவை என்ற உண்மை ஒரு போதும் மறுக்கப்பட முடியாதது.

உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் வார்த்தைகளில் சொல்வதானால், 'ரோஜா மலரை வேறு எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் அதன் நறுமணம் மாறிவிடாது.'

சட்டத்தை பொறுத்தவரையில் இந்தக் கைதிகள் அனைவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் என்ற ரீதியில், மனிதாபிமான அடிப்படையில் இவர்கள் அனைவரினதும் விடுதலைக்கான ஒரு பொது வேண்டுகோளில் இணைந்து கொள்வதில், அரசாங்க சார்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட, எந்த தயக்கமும் இருக்க முடியாது.

இப்போது தேவைப்படுவது எல்லாம், தொடர்ந்து மௌனமாக துன்பப்படும் இந்த் நாதியற்ற தமிழர்களின் விடுதலைக்கான ஆக்கபூர்வமானதும், அர்த்தம் மிக்கதுமான நடவடிக்கைகளே!

ஆகவே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த, சகல தமிழ் எம். பிக்களும் ஒரு கூட்டான கோரிக்கையை சமர்ப்பிப்பது இன்றைய நிலையில் இந்த விடயத்தில் மிகவும் அவசியமானது.

மொத்தம் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக ஒரே குரலில் உரிய கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் முன்வைத்தால், அதற்கு உரித்தான கணிப்பினை கருத்தில் கொண்டவராக, அவர் அதனை பரிசீலிக்க வேண்டி இருக்கும்.

எனவே இந்த நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கும் விதத்தில், தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் 'குரலற்றோர் அமைப்பு' செயலில் இறங்க வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் விடுக்கின்றோம்.

நாதியற்ற தமிழ்க்கைதிகளின் விடுதலையை ஓர் புதிய அணுகுமுறையோடு கையாள்வதற்கும், சாதிப்பதற்கும் வழி ஏற்படும் என்ற எதிர்பார்ப்போடு இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

## அரசியல் கைதிகள் விடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பற்றி நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் பேசியிருக்கின்றேன்.

வடக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கலந்துரையாடி இருக்கின்றேன்.

இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும், அது நல்லிணக்க நடைமுறையைப் பலப்படுத்தும் என்றும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

இது தொடர்பில் நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த நேரத்தில்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்தது.

அதன் பின் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப வேண்டியதாயிற்று.

எனினும், ஏதாவதொரு வகையில் தீர்வு விரைவில் வரும் என்று நம்புகின்றேன் - என்றார்.

## அரசியல்கைதிகளை உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து வருகின்றனர்.

அவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான செயற்பாட்டை இன்று வரை மேற்கொள்ளவில்லை என்பதுதான் எனது கருத்தாக உள்ளது.

அதேநேரத்தில் மிருசுவில் பகுதியில் பொதுமக்களைக் கொலை செய்த இராணுவ அதிகாரியையும், ஆயுதங்களுடன் பிடிபட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பௌத்த குருவையும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்புவழங்கிவிடுதலைசெய்துள்ளார்.

அப்படியான ஒரு சூழ்நிலையில் இன்று சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது. அரசியல் கைதிகளின் உயிர்களுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை இருக்கின்றது.

அவ்வாறான சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு இன்னும் மௌனம் காப்பது தமிழர்களுடைய எந்தவிதமான கோரிக்கைகளையும் நிறைவேற்றக்கூடாது என்கின்ற மனோநிலையையே ஜனாதிபதி கொண்டுள்ளார் எனத் தெரிகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தோம்.

அவ்விடயம் தொடர்பில் நாளை ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரதமரைச் சந்தித்து அவர் முன்னெடுத்துள்ள முயற்சிகள் பற்றி கேட்க இருக்கின்றோம்.

உண்மையில் இன்றைய சூழ்நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது அவர்களின் குடும்பங்களைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமான விடயமாக இருக்கின்றது.

எனவே, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு முழுமையான கவனம் செலுத்தி அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தாவது விடுவிக்க வேண்டும் அல்லது பிணையிலாவது செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## ஈ.பி.டி.பியிடமும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவை சேனாதிராஜா குறுஞ்செய்தி மூலம் ஆதரவு கோரியிருந்தார்.

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எடுத்த முடிவின் காரணமாக ஆனோல்ட்டுக்கு ஆதரவு வழங்கவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

## கருணாவை கூட்டமைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்களில் நானும் ஒருவன். நான் அவர்களின் தவறுகளைத் திருத்த வேண்டுமென்றே விமர்சிக்கின்றேன். ஆனால், அவர்களுடனான உறவு இப்போதும் தொடர்கின்றது. எதிர்காலத்தில் அவர்களுடன் பேசுவதற்கும் தயாராக இருக்கின்றோம்' என்று கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த சிவஞானம்,

கருணா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துசெயற்படவிரும்புகின்றார் என்று தெரிவித்தாரே தவிர கூட்டமைப்பு அவரை இணைத்துக்கொள்ளும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை. அவரைக் கூட்டமைப்புடன் இணைப்பது என்பது சாத்தியப்படாத ஒரு விடயம் - என்றார்.

## 37,817 பேர் இதுவரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
37 ஆயிரத்து 817 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 6 ஆயிரத்து 744 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனாவால் இதுவரை 213 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இலங்கைக்கு நாளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2021ஆம் ஆண்டு இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரியாக இவர் கருதப்படுகின்றார்.

இரு நாடுகளிலும் கொரோனாப் பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புக்களையும் வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜெய்சங்கர் சந்திக்கின்ற விடயத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. 'காலைக்கதிர்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

## 103 ஆறுகள் அபிவிருத்தி அமைச்சர் அமரவீர தகவல்



நதி பாதுகாப்பு செயற்திட்டம் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் 103 நதிகள் அபிவிருத்தி செய்யப்படும் என சுற்றாடற்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையிலுள்ள 103 ஆறுகளையும் உள்ளடக்கும் வகையில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

'உலக ஈரநிலங்கள் தினம்' நிகழ்வுடன் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நதி பாதுகாப்பு செயற்திட்டத்துக்கு 20 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது. இந்தக் முழு தொகையை வழங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுவரை ஆட்சியில் இருந்த எந்தவோர் அரசாங்கமும் ஆறுகளை பாதுகாக்கும் விடயத்தில் கவனம் செலுத்தவில்லை.

நதிகளின் விளிம்பு பகுதிகளில் உள்ள சட்ட விரோத கட்டடங்கள் இந்த செயற்திட்டத்தின் ஊடாக அகற்றப்படும்.

ஆற்றுப்படுகையில் உள்ள மண் வளத்தைப் பாதுகாக்க பலமான மரங்கள் கரையோரங்களில் வளர்க்கப் படும். சட்ட விரோத மண்ணகழ்வு செயற்பாடுகளைத் தவிர்க்க 24 மணித்தியால கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

## மருதனார்மடம் கொத்தணி: ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உட்படுத்தப்பட்டதில் ஐவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மூவரும், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இருவரும் உள்ளடங்குகின்றனர்.

இரண்டாம் கட்டப் பரிசோதனையின் போதே குறித்த நபர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## சுற்றுலாத்துறையாலும் புதிய கொத்தணி?

வானத்தில் போகின்ற பிசாசை ஏணி வைத்து இறக்கி மடியில் கட்டிக் கொண்டு விட்டு, பிறகு, குடையுது, குடையுது என்று கூப்பாடு போடுவதா என்று பேச்சளவில் நம் மத்தியில் கேள்வி எழுப்பப்படுவதுண்டு.

கோட்டாபய அரசின் முக்கிய நடவடிக்கை ஒன்றைப் பார்க்கும் போது இப்படித்தான் கேள்வி எழுப்பத் தோன்றுகின்றது.

கொரோனாத் தொற்று உலகம் முழுவதையும் பீடித்து ஆட்டிப் படைத்து வருகின்றது.

இதன் முதல் தாக்கத்தை கடந்த மார்ச் மாதத்தில் இலங்கை எதிர்கொண்ட போது அதைக் கட்டுப்படுத்தி அடக்குவதில் நமது நாடு வெற்றி கண்டது என்றே கூற முடியும்.

அப்போது வெலிசறை கடற்படை முகாம் தொற்றுக் கொத்தணி, கந்தக்காடு புனர்வாழ்வு முகாம் தொற்றுக் கொத்தணி என்றெல்லாம் ஏற்பட்ட போதும் அந்தத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் அரசு வெற்றி கண்டது.

ஆனால் மினுவாங்கொடை பிராண்டிக்ஸ் ஆடை தொழிற்சாலையில் முதல் தடவையாக அடையாளம் காணப்பட்ட இரண்டாவது தொற்று, பேலியகொடை மீன்சந்தைக் கொத்தணி, சிறைச்சாலைக் கொத்தணி என்று சூறாவளியாகப் பற்றிப் பரவி இன்று இலங்கை முழுவதிலும் தீவிரம் அடைந்திருக்கின்றது.

இந்த இரண்டாவது தாக்கத்துக்குக் காரணமாக தொற்று, உக்ரைன் நாட்டிலிருந்து வந்து கொழும்பு ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த விமானி மூலம், ஹோட்டல் ஊழியர்களுக்குப் பரவி, இலங்கை முழுவதும் வியாபித்து விட்டது. இரண்டாவது தொற்றுப் பரவல் உக்ரைன் விமானி மூலமே ஆரம்பித்து இங்கும் பரவியது என்பதை இலங்கை அரசுத் தரப்பே வெளியிட்டது என்பது கவனிக்கத்தக்கது.

இப்போது அதே உக்ரைன் நாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகளை 'இறக்குமதி' செய்து புதிய மோசமான சுற்றுலாப் பயணிகள் கொத்தணி ஒன்றுக்கு அத்திவாரம் போடுகின்றது அரசு.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திய நாடுகளில் இருந்து மாத்திரமே சுற்றுலாப் பயணிகளை தருவிக்க சுற்றுலாப் பயண சபை திட்டமிட்டது. அதுதான் பாதுகாப்பானது என்பது தெரிந்த விடயம்.

அந்தச் சபை தயாரித்த திட்டத்தில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திய நாடுகள் பட்டியல் படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பட்டியலில் உக்ரைன் இடம்பெற்றிருக்கவில்லை.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சாதகமான பிரதிபலிப்பைக் காட்டிய நாடு அல்ல உக்ரைன்.

அந்த நாட்டில் இலங்கையை விட மோசமாகக் கொரோனாத் தொற்றுப் பரவி வருகின்றது. ஏற்கனவே அந்த நாட்டில் இத்தொற்றினால் 19 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்த வரை கொவிட் தொற்று மரணம் மிகவும் குறைந்த நிலையில்தான் உள்ளது. இங்கு பத்து லட்சம் பேருக்கு ஒருவர் என்ற எண்ணிக்கை வீதத்தில்தான் கொரோனாத் தொற்று உயிரிழப்பு உள்ளது. இதுவே உக்ரைனில் நானூறு வீதம் அதிகமாகும். அங்கு பத்து லட்சம் பேருக்கு 430 என்ற அடிப்படையில் இறப்பு வீதம் உள்ளது.

அந்த நாட்டில் இருந்துதான் உல்லாசப் பயணிகளை மீளவும் முதன் முதலில் இலங்கைக்கு அழைத்துவர அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அரசியல் செல்வாக்குள்ளோர் நாட்டின் எதிர்காலத்தைப் பேரவலத்தில் மாட்டியபடி இதில் காரியமாற்றி, இலாபமடைய முயற்சிக்கின்றனர் எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹர்ஷ டி சில்வா கூறுகின்றார்.

இப்போது உக்ரைனிலிருந்து பல்லாயிரக் கணக்கில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் திட்டத்தின் சூத்திரதாரி உதயங்க வீரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர். ஏற்கனவே ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இலங்கைத் தூதுவராக இருந்தவர். அந்த வேளையில் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டவர் எனத் தெரிவித்துப் பின்னர் பல நெருக்குவாரங்களுக்கு உள்ளானவர். நல்லாட்சிக் காலத்தில் அவரைத் தேடிப் பிடிக்க சர்வதேச பொலிஸ் மூலம் பிடிவிறாந்து கூடப் பிறப்பிக்கப்பட்டது. அவர் தொடர்புடைய 'மிக்' யுத்த விமானக் கொள்வனவு சம்பந்தமான ஊழல்களை அம்பலப்படுத்திய 'த சண்டே லீடர்' வாரப் பத்திரிகையில் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க ராஜபக்ஷக்களின் இருண்டயுக ஆட்சியின்போது படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் பின்புலத்தில்தான், ஹர்ஷ டி சில்வா எம்.பி. சுட்டிக் காட்டுவது போல –

சுகாதாரப் பாதுகாப்பைப் பின்பற்றி சுற்றுலா சேவையில் ஈடுபட சுற்றுலா சேவைத் துறையினர் தயாராக இருக்கும்போது, பிற தரப்பினர் அரசியல் செல்வாக்குடன் சுற்றுலாத்துறை சேவையில் குறுக்கு வழியில் ஈடுபடும் நிலைமை தோன்றியுள்ளது.

இதன் மூலம் அரசுக்கு நெருக்கமானவர்கள் குறுக்கு வழியில் இலாபமீட்டி விட்டுப் போகட்டும். அதில் பிரச்சினை இல்லை. ஆனால் புதிய சுற்றுலாத்துறை கொவிட் கொத்தணி அதனால் உருவாகிக் கோரத் தாண்டவம் ஆடாவிட்டால் சரி.

# மாகாணசபை முறைமை நீக்கம் தீவிரமாக ஆராய்கின்றது அரசு!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



இந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பின் முதலாவது வரைவை அரசாங்கம் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், மாகாணசபை முறைமைக்கு என்ன செய்வது என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாகாணசபை முறைமை நீக்கப்படுமா அல்லது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது தொடர்பாக விமர்சனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பாக வினவியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மாகாணசபை முறைமை அவசியமா இல்லையா என்பது பற்றி அரசாங்கத்தில் கருத்து, மாற்றுக் கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

எனினும் எதிர்க்கட்சியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இன்று மாகாணசபை தேர்தலை சாட்டாக வைத்துக்கொண்டு விமர்சனக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் மாகாணசபை தேர்தலை நடத்தாது ஆட்சியைத் தக்கவைக்க பல சூழ்ச்சிகளைச் செய்தனர்.

மாகாணசபைகள் இன்று காலாவதியாகியுள்ளமைக்கு முன்னைய அரசாங்கமும் அவர்களுக்கு துணை நின்ற தமிழ், முஸ்லிம் கட்சிகளுமே காரணமாகும்.

வடக்குத் தமிழ் மக்கள் இன்று நெருக்கடியை சந்திக்கவும், கிழக்கில் முஸ்லிம் மக்கள் நெருக்கடியை சந்திக்கவும் முன்னைய ரணில் – மைத்திரி ஆட்சியை ஆதரித்து அவர்களுக்குத் துணை நின்றவர்களே காரணம்.

எது, எவ்வாறு இருப்பினும் இன்று நாம் மக்கள் ஆட்சியை உருவாக்கி இந்த நாட்டுக்கு ஏற்ற சட்டத் திருத்தங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொண்டு அதற்கமைய தீர்மானங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட்டு இந்த நாட்டின் புதிய பயணம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு நவம்பர் மாதம் இறுதிக்குள் புதிய அரசமைப்புக்கான ஆரம்ப வரைவு முன்வைக்கப்படும். இதில் சகல கட்சிகள், சிவில் அமைப்புகள் என சகலரதும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும். இந்த வேலைத் திட்டங்கள் இப்போதே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உருவாக்கப்படும் புதிய அரசமைப்பில் மாகாணசபை முறைமை உள்வாங்கப்படுமா அல்லது இந்தியா திணித்த 13 ஆம் திருத்தம் நீக்கப்பட வேண்டுமா என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும்.

இதில் மக்களின் கருத்துக்கள் ஆராயப்படும். இப்போது நீண்ட காலமாக மாகாணசபைகள் இயங்காது மக்கள் எந்தவித கஷ்டங்கயையும் சந்திக்காது உள்ளனர் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். – எனவும் அவர் குறிப்பிட்டார்.

# புத்தளத்தில் விபத்து ஒருவர் பரிதாப சாவு!

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் பம்பல பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு திம்பிரியகஸ்கடுவ பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தளம் பகுதியிலிருந்து கொழும்பு பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, கொழும்பு பகுதியிலிருந்து புத்தளம் பகுதியை நோக்கிப் பயணித்த பயணிகள் பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞனை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்கொழும்பு கடற்பரப்பில் 180 கிலோ போதைவஸ்து





இலங்கை கடற்படையினர் நீர்கொழும்பு கடற்பரப்பில் 180 கிலோகிராம் போதைப்பொருளை மீட்டுள்ளமையுடன், இதன்போது நான்கு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

அதன்படி 100 கிலோ கிராம் ஐஸ் எனப்படும் போதைப்பொருள், 80 கிலோ கிராம் ஹாஷிஷ் போதைப்பொருள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டிசில்வா தெரிவித்தார்.

இதன்போது நான்கு சந்தே நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்கள் போதைப் பொருள் கடத்தலுக்காகப் பயன்படுத்திய படகும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைதானவர்கள் சிலாபத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம், புலனாய்வு சேவை மற்றும் விமானப் படை ஆகியவற்றுடன் கடற்படை நடத்திய கூட்டு நடவடிக்கையின் போது இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக நடவடிக்கைகளுக்காக கைதான சந்தேக நபர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மயான மேற்கூரை இடிந்து விழுந்ததில் உத்தரப்பிரதேசத்தில் 23 பேர் மரணம்





உத்தர பிரதேசத்தில் காசியாபாத் மாவட்ட மயானத்தில் உள்ள கட்டடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 23 பேர் உயிரிழந்தனர்.

முராத்நகர் பகுதியில் உள்ள மயானத்தில் உயிரிழந்த ஒருக்கு இறுதி சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது கன மழை பெய்ய தொடங்கியதால் அங்கிருந்தோர் அருகில் உள்ள மயானக் கட்டடத்தில் ஒதுங்கினர். அப்போது திடீரென மயானத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 23 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 15 பேர் காயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அங்கு மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த சம்பவம் குறித்து உயர்மட்ட விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டு உள்ளது.

தரம் குறைந்த கட்டுமானப்பொருள்கள் மூலம் கட்டடம் கட்டப்பட்டதே இந்த சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இதற்கிடையில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளன.

## ஜம்மு – காஷ்மீரில் முஸ்லிம் இளைஞர்களை தீவிரவாதிகளாக்க ஒன்லைன் மூலம் முயற்சி



இந்திய பாதுகாப்புப் படையினர் கழுகுப்பார்வையில் இருந்து தப்பி தீவிரவாத இயக்கத்திற்கு ஆள் சேர்க்க பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்கள் ஜம்மு காஷ்மீரில் உள்ள முஸ்லிம் இளைஞர்களை ஒன்லைன் மூலம் குறிவைத்துள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய இராணுவத்தினர் முஸ்லீம்கள் மீது அத்துமீறுகின்றனர் எனவும் அப்பாவிகள் துன்புறுத்தப்படுகின்றனர் எனவும் போலியான வீடியோக்களைப் பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. தயாரித்து தீவிரவாதிகளுக்கு அளிக்கிறது எனவும் கூறப்படுகிறது.

அவற்றை சமூக ஊடகங்கள் வாயிலாக இந்த தீவிரவாத இயக்கங்கள் வெளியிட்டு இளைஞர்களைத் தூண்டிவிடுகின்றன. இதில் சிக்கும் இளைஞர்களுக்குத் தீவிரவாதப் பயிற்சிகள் அளித்துவருவதாகவும் உளவுத்துறையினர் சைபர் குற்ற நிபுணர்களை எச்சரித்துள்ளனர்.

## குடியரசுத் தின அணிவகுப்பு மிகக் குறைந்த வீரர்களுடன்



இந்த ஆண்டு குடியரசு தின அணிவகுப்பை குறைந்த வீரர்கள், குறைந்த பார்வையாளர்களுடன் நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

வங்கதேச உதயத்தின் 50 ஆவது ஆண்டு விழாவும் கொண்டாடப்படுவதால் அணிவகுப்பில் வங்காள தேச வீரர்களும் கலந்துக் கொள்கின்றனர்.

கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடுமையாகப் பின்பற்றப்பட உள்ளன. கலாசார நிகழ்ச்சிகளும் சுருக்கமாக முடித்துக் கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அணிவகுப்பு தூரத்தை மூன்று கிலோ மீற்றராக குறைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 05.01.2021 | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12<br>உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13<br>உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12<br>தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08<br>கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08<br>விஞ்ஞானம் (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09<br>கணிதம் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09<br>விஞ்ஞானம் (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 கணிதம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 புவியியல் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 புவியியல் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 புவியியல் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07<br>விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 பௌதிகவியல் (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 பௌதிகவியல் (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13<br>தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06<br>கணிதம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06<br>விஞ்ஞானம் (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12<br>அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13<br>அரசியல் விஞ்ஞானம் (த) |

### தமிழ் மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்காக

# தமிழ் அகாடமியை அமைத்தது டெல்லியின் ஆம் ஆத்மி அரசு!



தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்காக டெல்லி ஆம் ஆத்மி அரசு தமிழ் அகாடமியை அமைத்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் மணிஷ் சிசோடியா, பன்முகத்தன்மை வாய்ந்த கலாச்சாரம் கொண்டுள்ள டெல்லிக்கு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

டெல்லி தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினரான என்.ராஜா அகாடமியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழுக்கு விருதுகள், கலாச்சார நிகழ்ச்சிகள், தமிழ் மொழி கற்பித்தல் போன்ற பணிகளை இந்த தமிழ் அகாடமி மேற்கொள்ள உள்ளது.

## உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டம் இந்தியாவில் ஆரம்பம் என்கிறார் மோடி

உலகின் மிகப்பெரிய கொரோனா தடுப்பூசி திட்டம் இந்தியாவில் தொடங்க உள்ளது என இந்தியப் பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்தார்.

'மேக் இன் இந்தியா' தயாரிப்புகளை உலகளவில் ஏற்றுக்கொள்வதை நாம் உறுதி செய்ய வேண்டும் என பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார்.

தேசிய அளவியல் 'மேக் இன் இந்தியா' மாநாட்டை பிரதமர் மோடி இன்று காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தார். மேலும், தேசிய அணு கால அளவு மற்றும் பாரதிய நிர்தேக் திரவியா ஆகியவற்றை தொடக்கி வைத்து அவற்றை நாட்டுக்கு அர்ப்பணித்தார். தேசிய சுற்றுச்சூழல் தர நிர்ணய ஆய்வகத்துக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் பிரதமர் மோடி பேசியதாவது:-

இந்திய விஞ்ஞானிகளால் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 2 கொரோனா தடுப்பூசிகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதில் வெற்றி பெற்றுள்ளனர். விஞ்ஞானிகளால் நாடு பெருமை கொள்கிறது. உலகின் மிகப்பெரிய கொரோனா தடுப்பூசி திட்டம் இந்தியாவில் தொடங்க உள்ளது.

உலகளாவிய தேவை மட்டுமல்லாமல், 'மேக் இன் இந்தியா' தயாரிப்புகளை உலகளவில் ஏற்றுக்கொள்வதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். தரம் மற்றும் நம்பகத்தன்மையின் அடிப்படையில் இந்திய தயாரிப்புகளை நாம் வலுப்படுத்த வேண்டும்.- என்றார்

## மும்பை ஹோட்டலில் தெலுங்கு நடிகை போதைப் பொருள் கும்பலுடன் கைது!




மும்பையில் மீரா ரோடு பகுதியில் உள்ள ஓர் ஹோட்டலில் திடீர் சோதனை நடத்திய போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகள் தெலுங்கு நடிகை ஒருவரையும் போதைப் பொருள் தரகர் உள்ளிட்ட சிலரையும் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 10 லட்சம் ரூபா மதிப்புடைய 400 கிராம் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பல்வேறு பெரிய நடிகர் நடிகைகள் உட்பட பலரிடம் போதைப் பொருள் அதிகாரிகள் விசாரணை நடத்தி இதுவரை 39 பேரை கைது செய்துள்ளனர்

# தேர்தல் முடிவுகளை தனக்கு சாதகமாக மாற்ற மிரட்டல் விடும் ட்ரம்ப்பின் ஒலிப்பதிவு வைரல்!



அமெரிக்காவின் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப், ஜியார்ஜியாவின் உயர்மட்ட தேர்தல் அதிகாரியை மாநில ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தனக்குச் சாதகமாக மறுபரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தியுள்ள ஒலிப்பதிவு வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஒளிப்பதிவு வொஷிங்டன் போஸ்ட்டால் பெறப்பட்ட ஒரு மணி நேர தொலைபேசி அழைப்பு, தற்போது வைரலாகப் பரவிவருகின்றது.

ஜார்ஜியா ஏற்கனவே பல தணிக்கைகளையும் முடிவுகளையும் மறுபரிசீலனை செய்திருந்தது. இது பைடனின் வெற்றியை உறுதிப்படுத்தியது.

மேலும் அந்த முடிவுகளை அதிகாரபூர்வமாகச் சான்றளித்தது, இது ஜனவரி 6 ஆம் திகதி காங்கிரஸால் அங்கீகரிக்கப்படும்.

இருப்பினும், ட்ரம்ப், குடியரசுக் கட்சியின் வெளியுறவுத் துறை செயலாளர் பிராட் ராபென்ஸ்பெர்கரிடம் ஜியார்ஜியா மாநிலத்தில் தாம் வெற்றி பெற்றார் என மாற்றி அறிவிக்கும் வகையில் கள்ள வாக்குகளை ஏற்பாடு செய்யுமாறு கூறியுள்ளார்.

ஜியார்ஜியாவில் 11 ஆயிரத்து 779 வாக்குகள் வித்தியாசத்தில் ஜோ பைடனிடம் தோற்றதால் ட்ரம்ப் அந்த மாநிலத்தின் தேர்தல் வாக்குகளையும் இழந்தார். எனினும், ட்ரம்பின் கோரிக்கைக்கு அமைச்சர் பிராட் ராபென்ஸ்பெர்கர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

ஒரு கட்டத்தில் கள்ள வாக்குகளுக்கு ஏற்பாடு செய்யவில்லை என்றால் விளைவு ஆபத்தானதாக இருக்கும் என ட்ரம்ப் மிரட்டியுள்ளார். இந்த நிலையில் இதன் உண்மை நிலை தொடர்பில் ஆராயப்படுகின்றது.

# சீன இராணுவச் சட்டத்தில் புதிய திருத்தங்கள்: அமெரிக்காவைப் பின்தொடரும் ஸி ஜின்பிங்!

சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் தலைமையில், இயங்கும் சீன இராணுவத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் வகையில் அங்கு இராணுவ சட்டத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த சட்ட திருத்தங்கள் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது என ஹொங்கொங்கில் இருந்து வெளிவரும் 'சவுத் சீனா மோர்னிங் போஸ்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த புதிய சட்ட திருத்தங்களுக்கு நாடாளுமன்ற நிலைக்குழு கடந்த 26 ஆம் திகதி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த புதிய சட்ட திருத்தங்கள், ஜின்பிங் தலைமையில் நாட்டின் இராணுவத் தலைமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்று இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மேலும், புதிய இராணுவ தொழில் நுட்பங்கள், இணைய பாதுகாப்பு, விண்வெளி, மின் காந்தவியல் ஆகியவற்றின் ஆராய்ச்சியில் பங்கேற்பதற்கு அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களையும், தனியார் நிறுவனங்களையும் அணி திரட்டுவதற்கான நாடு தழுவிய ஒருங்கிணைப்பு முறையை உருவாக்குவதின் அவசியத்தை புதிய சட்ட திருத்தங்கள் வலியுறுத்துகின்றன.



67 வயதான ஸி ஜின்பிங், நாட்டின் ஜனாதிபதி என்பதோடு மாசேதுங்குக்கு பிறகு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வலிமை வாய்ந்த தலைவராக திகழ்கிறார். கட்சியின் பொதுச்செயலாளர் பதவியையும் வகிக்கி றார். இராணுவத்துக்கு அவர்தான் தலைவர். இவை அனைத்தும் அவர் வாழ்நாள் முழுவதும் பதவி வகிக்கத் துணை நிற்கும் என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்க இராணுவத்துக்குச் சமமாக சீன இராணுவத்தை 2027ஆம் ஆண்டுக்குள் அதிநவீனமாக கட்டமைக்க வேண்டும் என்று கடந்த நவம்பர் மாதம் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் முடிவு எடுத்த நிலையில், இந்த சட்ட திருத்தங்கள் கொண்டு வந்திருக்கின்றமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# வெற்றியை ஏற்க மறுக்கும் குடியரசு உறுப்பினர்கள்!

## வெற்றி சான்றிதழை பெறுவாரா பைடன்?

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடனின் வெற்றியை உறுதி செய்யும் இறுதி கட்ட நடவடிக்கையாக, வெற்றி சான்றிதழ் வழங்குவதை நிராகரிக்கப் போவதாக ட்ரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற கூட்டத்தின் போது, தேர்தலில் வெற்றி பெற்றதற்காக வழங்கப்படும் சான்றிதழ் வழங்குவதை நிராகரிக்கப் போவதாக டெக்சாஸ் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் டெட் குரூஸ் தலைமையில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை அறிவித்துள்ளனர்.

மேலும், அவர்கள் தேர்தல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஏதுவாக வெற்றி சான்றிதழ் வழங்குவதை 10 நாள்களுக்கு ஒத்தி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.



எனினும் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோ பைடனின் வெற்றிக்கு ஒப்புதல் அளிக்கத் தயாராக இருக்கின்றமையால் இவர்களின் முயற்சி பலன் அளிக்காது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் இன்னமும் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் தேர்தலில் முறைகேடுகள் நடந்தன என குற்றம் சாட்டி வருகின்ற நிலையில், அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடன் எதிர் வரும் 20 ஆம் திகதி பதவி யேற்கவுள்ளார்.

# மெக்ஸிகோவில் தடுப்பூசியை செலுத்திய வைத்தியருக்கு திடீர் உடல்நலக் குறைவு!



மெக்ஸிகோவில் பைஸர் – பயோஎன்டெக் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்ட மருத்துவருக்கு திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நியூவோ லியான் மாகாணத்தில் பைஸர் – பயோஎன்டெக் கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்ட 32 வயது பெண் மருத்துவருக்கு திடீரென வலிப்பும் மூச்சுத் திணறலும் ஏற்பட்டது.

இதையடுத்து, அவர் வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு 'என்செஃபலோமையலிடிஸ்' எனப்படும் மூளை தண்டுவட அழற்சி ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. ஏற்கனவே, அந்த மருத்துவருக்கு ஒவ்வாமை குறைபாடு இருந்துள்ளது.

பைஸர் தடுப்பூசியை தன்னார்வலர்களுக்குச் செலுத்தி சோதித்தபோது, யாருக்கும் 'என்செஃபலோமையலிடிஸ்' பாதிப்பு ஏற்பட்டதற்கான சான்றுகள் இல்லை என நாட்டு சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த விவகாரம் தொடர்பாக பைஸர் மற்றும் பயோஎன்டெக் நிறுவனங்கள் இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை.

# எண்ணெய் உற்பத்தி அதிகரிப்பு: ஆராய்கின்றன ஒபெக் நாடுகள்!

சந்தை நிலைமைகளைப் பொறுத்து அடுத்துவரும் மாதங்களில் எண்ணெய் உற்பத்தியை படிப்படியாக இரண்டு மில்லியன் பீப்பாய்கள் வரை அதிகரிக்கும் திட்டங்களை முன்னெடுக்க ஒபெக் நாடுகள் திட்டமிட்டுள்ளன.

ரஷ்யா தலைமையிலான ஒபெக் மற்றும் அதன் நட்பு நாடுகள் இதற்குத் தயாராகி வருகின்றன என ஒபெக் பொதுச் செயலாளர் முகமது பார்கிண்டோ நேற்று (ஞாயிற்றுக் கிழமை) தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸுக்கு எதிரான உலகளாவிய முடக்க நடவடிக்கைகளால் எரிபொருள்களுக்கான தேவை குறைவடைந்ததால் 2020 ஆம் ஆண்டில் ஒபெக்10 உற்பத்தியை குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒபெக்10 முதலில் வெளியீட்டை 9.7 மில்லியன் பீப்பாய்களுக்கு குறைத்தது. பின்னர் 7.7 மில்லியனாகவும், இறுதியில் ஜனவரி முதல் 7.2 மில்லியனாகவும் குறைத்தது.

இந்நிலையில், உலகளாவிய பொருளாதாரம் 4.4 வீதம் வளர்ச்சியடையும் என கணிக்கப்பட்டுள்ளதால், 2021ஆம் ஆண்டில் உலகளாவிய எண்ணெய் தேவை ஒன்பதாயிரத்து 219 மில்லியன் பீப்பாய்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தடுப்பூசிகளின் வளர்ச்சி, உலகப் பொருளாதாரம் மற்றும் எண்ணெய் சந்தைகளில் நம்பிக்கையை செலுத்தியிருந்தாலும், கொரோனா பரவலுக்கு முன்னைய தேவை அளவுக்கு வராது என ஒபெக் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1991.11.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - மூலம்
செவ் - -6 இல்
பாவம் - 11 3/4
கல்வி - IT Engineering
தொழில் - IT Engineer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச தொழில்

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1990.12.19
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்தராடம் 1
பாவம் - 36 3/4
செவ் - 12இல்
கல்வி - Software /CIMA
தொழில் - வங்கி அதிகாரி
எதிர்பார்ப்பு - Doctor or Engineer

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் பல்கலையில் உணவு தவிர்ப்புப் போராட்டம்












யாழ்.பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் இன்றையதினம் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டம் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலய நுழைவாயிலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்குமாறு கோரியே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த கோப்பாய் பொலிஸார் போராட்டத்தை கைவிடுமாறும், இந்த விடயத்தை உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு தெரியப்படுத்துமாறும் மாணவர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

பொலிஸாரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத மாணவர்கள் தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் 72 பேருக்கு தொற்று!

ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் மொத்தமாக 72 ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் மிகராபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை பற்றி அறிய நிறுவனம் தொடர்ந்து பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட மேலும் இரண்டு நோயாளிகள் சுகாதாரப் பிரிவின் கட்டுநாயக்க சீதுவ மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என பிரிவின் நிர்வாக பொது சுகாதார ஆய்வாளர் சுரேஷ் குமாரா தெரிவித்தார்.

அவர்களில் ஒருவர் சீதுவாவில் ஒரு கையுறை உற்பத்தி தொழிற்சாலையில் பணிபுரிபவர், மற்றையவர் கட்டுநாயக்க, ஹீனதியன பகுதியைச் சேர்ந்த 09 வயதுடைய குழந்தை ஆவார்.

மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக அவர்கள் வத்துபிடிவலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பி ஓடியவர் கைதானார்!

**வவுனியாவில் சம்பவம்**

வவுனியா, ஜன. 04

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்தை ஏற்படுத்திய இளைஞரை வவுனியா போக்குவரத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருகையில் -

வவுனியாநகர்பகுதியில் இருந்து கோவில்குளம் நோக்கி பயணித்த இலகு ரக வாகனம் ஹொறவப்பொத்தானை வீதியால் திரும்ப முற்பட்டபோது பின்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் தூக்கி வீசப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிளை அந்த பகுதியிலேயே விட்டு விட்டு தலைமறைவாகியிருந்தார்.

எனினும் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். அவர் மது போதையில் இருந்தார் எனத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 9 ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிப்பு!

சௌபாக்கிய தொலைநோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 5 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்தின் முதற்கட்டமாக 3 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் திங்கட்கிழமை ஒறுகொடவத்தை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின், மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதல் கட்டத்தின் கீழ் குறித்த வீட்டுத்திட்டம் கொழும்பு மாவட்டத்தின் ஒறுகொடவத்தை, புளூமெண்டல், மாலம்பே, மாகும்புர, பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேநேரம், கம்பஹா மாவட்டத்தின் பேஹலியகொடை பிரதேசத்திலும் கண்டி மாவட்டத்தின் கெடம்பே பிரதேசத்திலும் இந்த வீடமைப்பு திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!**

**நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.**

**விலை - 150/=**







**லக்சுமி வெதுப்பகம்**
**ஆறுகால் மடம்.**
**077 218 9718**

**கற்பகவனம் விற்பனை நிலையம்.**
**461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் முற்றம் - Yarl Muttam)**
**021 492 7778**


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2021இல் வெளியிடப்பெற்றது.